A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 10 / 2023**

திரு சோமசுந்தரேஸ்வர் மற்றும் ராமலஷ்மி,
பிளாட் எண் 69 Phase IV, 13வது தெரு,
எவர்கிரீன் என்கிளேவ், வெங்கம்பாக்கம்,
ரத்தினமங்கலம், வண்டலூர்.

………மேல்முறையீட்டாளர்
(திரு கா. தொண்டைமான்)

எதிர்

1. இளநிலை பொறியாளர்/கண்டிகை,
செங்கற்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கண்டிகை, வண்டலூர்,
கேளம்பாக்கம் ரோடு – 600 127.

2. செயற்பொறியாளர்/ இ&ப/மறைமலைநகர்,
செங்கற்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், GST ரோடு,
போர்டு கம்பெனி அருகில், மறைமலைநகர் – 603 209.

. . . எதிர்மனுதாரர்கள்
(திருமதி M. ரஞ்சிதம், இளநிலை பொறியாளர்/கண்டிகை
திரு R. மனோகரன், செயற்பொறியாளர்/ இ&ப/மறைமலைநகர்)

**மனு பெறப்பட்ட நாள்: 30-01-2023**

**கேட்புரை நாள்: 19-04-2023**

**ஆணை நாள்: 26-04-2023**

30.01.2023 அன்று பெறப்பட்ட திரு சோமசுந்தரேஸ்வர் மற்றும் ராமலஷ்மி , பிளாட் எண் 69 Phase IV 13வது தெரு , எவர்கிரீன் என்கிளேவ், வெங்கம்பாக்கம், ரத்தினமங்கலம், வண்டலூர் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 10/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது . மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 19.04.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1.0 மேல்முறையீட்டாளரின் கோரிக்கை

1.1 மும்முனை மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்ததற்கு காலதாமதமாக மின் இணைப்பு வழங்கப்பட்டதால் இழப்பீடு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் புதிதாக கட்டப்பட்டுள்ள வீட்டிற்கு மும்முனை மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் கண்டிகை பிரிவு அலுவலரால் களஆய்வு மேற்கொண்டு உரிய மதிப்பீடு தயார் செய்து மின்இணைப்பு வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், மின்தளவாட பொருட்களின் பற்றாக்குறை ஏற்பட்ட நிலையில் மின் இணைப்பு வழங்க காலதாமதமானதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, புதிதாக கட்டப்பட்ட வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம் , மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 21.07.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் , செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம் 28.10.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது . மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம் , மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 28.10.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது . அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *As per the para in findings, the Licensee should complete the petitioner's LT extension work for effecting supply to be completed within 10 days from the date of receipt of this order, however the licensee should maintain DSOP time frame as per TNERC regulations in future, and hence the petition closed."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 19.04.2023 அன்று நேரில் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு கா. தொண்டைமான் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி M. ரஞ்சிதம், இளநிலை பொறியாளர் /கண்டிகை மற்றும் திரு R. மனோகரன், செயற்பொறியாளர்/ இ&ப/மறைமலைநகர், செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது . குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள் , குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய

நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம் பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

5.1 சோமசுந்தரேஸ்வர் மற்றும் ராமலஷ்மி ஆகிய தங்கள் இருவர் பெயரில் Plot No. 69 Phase IV, 13th st, Evergreen Enclave, Vengampakkam, Rathinamangalam, Vandalur என்கிற முகவரியில் கட்டப்பட்டுள்ள வீட்டு உபயோகத்திற்கு 4.0 கிலோவாட் மும்முனை மின்இணைப்பு வேண்டி சென்ற 10.05.2022 அன்று இரண்டு விண்ணப்பங்கள் பதிவு செய்ததாகவும், பதிவு எண் (1) 200095760522554 மற்றும் (2) 200095760522555 விண்ணப்பம் பதிவு செய்தது முதல் விண்ணப்பத்தின் நிலைதனை அறியும் பட்டியலில் குறிப்பிட்டுள்ள மின்இணைப்பு வழங்கிடும் தேதி நாளான 09.07.2022 வரை தனக்கு மின்இணைப்பு வழங்கிடவில்லை எனவும் மேல்முறையீ ட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மின்நுகர்வோர் குறைத்தீர் மன்றத்தில் சென்ற 27.07.2022 அன்று முறையிட்ட மனு பதிவு எண் 2707220631198 எனவும், அதற்கான விசாரணைக்கான தங்களின் அழைப்பு கடிதம் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட முகவரியினை முழுமையாக குறிப்பிடாததால் சம்பந்தமில் லாத முகவரிக்கு சென்றடைந்து அத ன்பால் அதனை பெற்ற நபர் கடித உரையில் மேல் குறிப்பிட்டிருந்த கைபேசியில் அழைத்து அதன் விவரத்தினை தெரிவித் ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அதனை மன்றத்தின் முன்வைத்திட்ட போது மன்றம் ஏற்க மறுத்து பல்வேறு காரணங்களை தெ ரிவித்ததாகவும், இதுபோன்று மின்நுகர்வோர் தவறு செய்தால் தண்டிக்காமல் விட்டுவிடுமா என்பதும் வழங்கிடும் ஆணையில் தான் உள்ள தாகவும், ஆகவே விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகள் மனுதாரர் முழுமையாக அறிந்திட்டது கிடையாது எனவும், அக்காலத்திற்குள் மின்இணைப்பு வழங்கிடவில்லை எனவும், நிர்வாகம் ஏற்று செய்யும்

அக்கால குறிப்புகளின்படியும் தனக்கு மின்இணைப்பு வழங்கிடவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்தின் தலைமை பொறியாளர் அவர்கள் இயக்குநர் /பகிர்மானம் அவர்களுக்காக குறிப்பாணை எண் . த.பொ/ வணிகம்/ மே.பொ/வணிகம்/செ.பொ.3/உ.செ.பொ/கணினியுடன் நேரடி விண்ணப்பம்/D.66/2016, நாள்–05.08.2016 நாளிட்ட குறிப்பாணையில் வரிசை எண்–13 மற்றும் 14 இல் குறித்துள்ளபடி வரிசை எண்–13 I. பதிவு கட்டணங்கள் செலுத்தப்பட்ட நாளிலிருந்து மின் இணைப்பு வழங்கப்படும் நாள் வரை இணையதளத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தகுதி நிலையை சம்பந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர்கள் அதனை கண்காணிக்க வேண்டும் எனவும், இணையதளம் வழியாக பெறப்படும் விண்ணப்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் பொறுப்பு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பொறியாளருடையது எனவும், மின் இணைப்பிற்காக உட்கோட்டத்தின் உதவி பொருட்களை ஏற்பாடு செய்வது தொடர்பான விவரங்களை உதவி செயற்பொறியாளர் அவர்கள் மின் பகிர்மான கோட்டத்தை சேர்ந்த சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் அவர்களின் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும், மின் இணைப்பு வழங்குவதற்கு தேவைப்படும் பொருட்களை ஏற்பாடு செய்வதற்கான பொறுப்பு மின் பகிர்மான கோட்டத்தின் செயற்பொறியாளருடையதாகும் என குறிப்பிட்டுள்ளதாகவும் , விண்ணப்பங்கள் கண்காணிக்கப்பட்டு தனக்கு மின்இணைப்பு வழங்கிடவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 ஒவ்வொரு வாரமும் இந்த செயல்பாடுகளை கோட்டத்தின் செயற் பொறியாளர் அவர்கள் கண்காணித்து அதன் அறிக்கையினை ஒவ்வொறு மாதமும் 3ம் தேதி அன்று மின்பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும் எனவும், அதனை ஒவ்வொரு மாதமும் 5ம் தேதி அன்று அவர் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர் அவர்களிடம் வழங்க வேண்டும் எனவும், அட்டவணையில் உள்ள படிவத்தில் கூறியுள்ளபடி மாதாந்திர அறிக்கையாக ஒவ்வொரு மாதம் 15ம் தேதி அன்று இயக்குநர் (மின் பகிர்மானம்) அவர்களிடம்

பகிர்மான மண்டல தலைமைப் பொறியாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், அந்த அறிக்கைகளை மேற்பார்வை பொறியாளர் கண்காணித்துள்ளார் என்பதும் இவ்விடத்தில் கேள்வியாக உள்ளதாகவும் மற்றும் கு.எண்.த.பொ/ வணிகம்/மே.பொ /வணிகம்/செ.பொ.3/உ.செ.பொ.3/கு.ஒருநாள் SC திட்டம்/ D 104/2017 நாள்: 14.06.2017 ன்படியும் தனக்கு மின்இணைப்பு வழங்கிடவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தனக்கு மின்இணைப்பு வழங்கிடாததால் ஏற்பட்ட பாதிப்புக்கு மின்நுகர்வோர் குறைத்தீர் மன்றத்திற்கு சமர்ப்பித்த தனித்தாளில் குறிப்பிட்டுள்ளபடியும் தங்களிடம் சமர்ப்பிக்கும் தனித்தாளில் குறிப்பிட்டுள்ளபடியும் ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கு ஈடு பெற பரிந்துரையும், விதிப்படியான காலத்திற்குள் வழங்கிடவில்லை என்றால் விதிகளின்படி சம்பந்தபட்ட பொறியாளர்க்கு அபராதமும் விதிக்கப்பட வேண்டும் எனவும், உரிய முகவரிக்கு தபால் கிடைத்திடாததற்கு பதிலும் வேண்டும் எனவும் வழங்கிடாத மின்இணைப்புக்கு தீர்வும், இதற்கான ஆணை கிடைத்திட வேண்டும் எனவும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 திரு சோமசுந்தரேஸ்வர் மற்றும் ராமலஷ்மி அவர்கள் மும்முனை மின்இணைப்பு வேண்டி கடந்த 10.05.2022 அன்று இரண்டு விண்ணப்பங்கள் (விண்ணப்ப எண்கள் 5760522554 மற்றும் 5760522555) கண்டிகை பிரிவு அலுவலகத்தில் இணைய தளம் வழியாக விண்ணப்பித்திருந்ததாகவும் , அதன் அடிப்படையில் கண்டிகை பிரிவு அலுவலரால் களஆய் வு மேற்கொண்டு உரிய மதிப்பீடு தயார் செய்து மின்இணைப்பு வழங்குவதற்குரிய மின்தளவாட பொருட்கள் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இந்நிலையில் மனுதாரர் கடந்த 27.07.2022 அன்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் இணையதளம் வழியாக , மின்இணைப்பு வழங்கப்படவில்லை என புகார் மனுவினை பதிவு செய்துள்ளதாகவும் , அதன் அடிப்படையில் நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டமானது 12.10.2022 அன்று நடைபெறுவதாக நுகர்வோர்

குறைதீர்க்கும் மன்றத் தலைவர் (மற்றும்) செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம் / மேற்பார்வை பொறியாளர் அவர்களின் கடிதம் வாயிலாக நுகர்வோருக்கு 03.10.2022 அன்று தெரிவிக்கப்பட்டு , அதன்படி 12.10.2022 அன்று நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்ற தாகவும், கூட்டத்தில் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்ட நிலையில், வாரிய தரப்பில் விண்ணப்பதாரருக்கு LT Line Conversion மேற்கொள்வதற்கான தளவாட பொருட்கள் பெறப்பட்டு , Meter பொருத்தப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும் என்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற ஆணையின்படி விண் ணப்பதாரருக்கு கடந்த 28.10.2022 அன்று மும்முனை மின்இணைப்புகள் முறையே விண்ணப்ப எண் 5760522554–ற்கு மின்இணைப்பு எண் . 576–005–1724–ம் மற்றும் விண்ணப்ப எண் 5760522555–ற்கு மின்இணைப்பு எண் . 576–005–1725–ம் வழக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் உலகம் முழுவதும் கொரோ னா வைரஸ் பெருந்தொற்றானது மார்ச் 2020 தொடங்கி மார்ச் 2022 வரையாக மூன்று காலகட்டத்தில் பெறும் பாதிப்பை ஏற்படுத்தியதும் மக்கள் அனைவரும் பாதிப்புக்கு உள்ளானார்கள் எனவும், Covid 19 காரணமாக இந்திய அரசாங்கம் 24 மார்ச் 2020 அன்று ஊரடங்கு உத்தரவை பிறப்பித்ததாகவும், ஊரடங்கினால் அனைத்து தொழில்துறைகளும் வணிகங்களும் மூடப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 தொழில் நிறுவனங்கள் மூடப்பட்ட காரணத்தால் மின்தளவாட பொருட்களின் உற்பத்தி திறன் குறைந்த தாகவும், Covid 19 மூன்று ஆண்டு கால கட்டத்தில் மின்தேவை வேண்டி விண்ணப்பங்கள் வரப்பெற்ற நிலையில் , அதற்கான மின்தளவாட பொருட்களின் பற்றாக்குறை அதிகரித்துள்ள தாகவும், இந்த ஏற்றத்தாழ்வினால் மின்தளவாட பொருட்களின் சமநிலை பாதிப்பு ஏற்பட்ட தாகவும், உற்பத்தி குறைவினால் ஏற்பட்ட பாதிப்பானது பின் படிப்படியாக சரிசெய்யப்பட்டதாகவும், இந்த சமநிலை பாதிப்பானது இயற்கையின் (கொரோனா வைரஸ் பெருந்தொற்று) காரணமானது மின்தளவாட பொருட்களின் தட்டுப்பாட்டிற்கு

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பொறுப்பு வகிக்க இயலாது எனவும், மேலும் மின்தளவாட பொருட்களின் பற்றாக்குறையினால் விண்ணப்பதாரருக்கு மின்இணைப்பு வழங்க சற்று காலதாமதம் ஏற்பட்டதும் காரணமாகும் எனவும், எனவே மனுதாரர் கோரிய இழப்பீட்டு கோரிக்கையை ரத்து செய்யுமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேலும் பெருந்தொற்று காலகட்டத்தில் மிககுறைந்த அளவே பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அக்காலகட்டத்தில் முன்பருவமழை காரணமாக விபத்தை தவிர்க்கும் பொருட்டு பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு கடந்த ஜீன் 2022 லிருந்து பரா மரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்ட கார ணத்தாலும் மின்இணைப்பு வழங்க காலதாமதம் ஏற்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேலும், கொரோனா காலம் முடிந்தவுடன் பராமரி ப்பு பணியில் ஈடுப்பட்டதாலும் , 28 ஜூலை 2022 முதல் 10 ஆகஸ்ட் 2022 வரை சதுரங்க ஒலிம்பிக்கில் அவருடைய அலுவலகம் மொத்தமும் ஈடுபட்டதாலும் வேலை பளு கூடியதாலும் பணிகள் அதிகபட்ச உத்வேகத்துடன் நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் மின் இணைப்பு வழங்குவதிலும் முன்னுரிமை அடிப்படையிலேயே தளவாட பொருட்கள் ஒதுக்கப்பட்டு பணிகள் உடனுக்குடன் முடிக்கப்பட்டதாகவும் இதில் தவறு ஏதும் ஏற்பட வில்லை என எதிர்மனுதாரர் வாதிட்டார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு .சோமசுந்தரேஸ்வர் மற்றும் ராமலஷ்மி ஆகிய இருவர் பெயரில் 10.05.2022 அன்று பதிவு செய்த விண்ணப்பங்களின் எண் 20095760522554 மற்றும் 20009576022555, ஆகிவற்றிற்கு 09.07.2022 வரை மின் இணைப்பு வழங்கவில்லை என்றும் , மேலும் இணையதளத்தின் வழியாக பெறப்படும் மின் இணைப்பு விண்ணப்பங்களை மின் இணைப்பு வழங்கும் வரை

உதவி செயற்பொறியாளரின் பொறுப்பாகும் மற்றும் மின் இணைப்பு வழங்குவதற்கு தேவையான பொருட்களை சேர்ப்பது செயற்பொறியாளரை சாரும் எனவும், மேலும் மேற்பார்வை பொறியாளரை இந்த விசயத்தில் மின் இணைப்பு வழங்கும் ஏற்பாடுகள் செய்யவில்லை என்றும் எனவே, தனக்கு உரிய காலத்தில் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் முறையிட்ட மனுவிற்கு தீர்வும் அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பு க்குரிய நிவாரணமும் வழங்க உத்தரவு வேண்டியும், உரிய காலத்தில் மின் இணைப்பு வழங்கப்படாததால் ரூ50,000/- இழப்பீடு தொகையாக வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் குறைதீர்மன்றத்தில் 12.10.2022 அன்று நடந்த கூட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஆணை யின் அடிப்படையில் 28.10.2022 அன்று மும்முனை மின் இணைப்புகள் முறையே விண்ணப்ப எண் 20095760522554-ற்கு மின் இணைப்பு எண் 566-005-1724 மற்றும் விண்ணப்ப எண் 20009576022555-ற்கு மின் இணைப்பு எண் 566-005-1725 வழங்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார் . கொரோனா காலத்தினால் மார்ச் 2020 முதல் மார்ச் 2022 வரை அனைத்து தொழில் துறையும் , வணிகங்களும் மூடப்பட்டன. தொழில் துறைகள் மூடப்பட்டதனால் மின்தளவாட உற்பத்தி திறன் குறைந்ததால் மூன்றாண்டு காலகட்டத்தில் மின் தேவை வேண்டி பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு தளவாட பொருட்கள் ஒதுக்குவதில் பற்றாக்குறை ஏற்பட்டது . அதனால் மின் இணைப்பு முன் னுரிமை அடிப்படையில்தான் தளவாட பொருட்கள் ஒதுக்கப்பட்டு வந்ததால் காலதாமதம் ஏற்பட்டது அன்றி தளவாட பொருட்கள் இருந்தும் மின் இணைப்பு வழங்கவில்லை என்ற வாதம் தவறாகும் என தெரிவித்துள்ளார்.

7.4 உரிமதாரருக்கு இந்த நிகழ்வு தளவாட பொருட்கள் உற்பத்தி குறைந்து சமநிலை பாதிக்கப்பட்டதால் ஏற்பட்ட நிலையே அன்றி இதற்கு உரிமதாரர் பொறுப்பேற்க முடியாது என தெரிவித்த நிலையில் , அதற்கான சான்றுகள் ஏதாவது உள்ளதா என்று மின்குறைதீர்ப்பாளர் வினவிய போது எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு ஒதுக்கீடு செய்த நகலையும் அதன் அடி ப்படையிலேயே மின் இணைப்புகள் முன்னுரிமை அடிப்படையிலேயே வழங்கப்பட்ட தாகவும்

தெரிவித்தார். எதிர்மனுதாரர் சமர்பித்த கீழ்க்கண்ட ஆவணங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன,

1. கண்டிகை பிரிவில் 4, 5 மற்றும் 6/2022 மாதங்களில் வழங்கப்பட்ட மின்னிணைப்புகள் விவரம்.

2. பண்டக சாலையில் 20.09.2022 அன்று 7/2.50 AAA Conductor இருப்பு (copy of Bin Card) பெறப்பட்ட விவரம்.

3. 7/2.50 AAA Conductor இருப்பு இல்லாத நிலையில் காத்திருப்பு பட்டியலில் இருந்த விண்ணப்பங்கள்.

4. கண்டிகை பிரிவிற்கு 7/2.50 AAA Conductor ஒதுக்கீடு செய்யப்பட்ட செயற்பொறியாளரின் 21.10.2022 நாளிட்ட ஆவணம்.

மேற்கண்ட ஆவணங்களின்படி 7/2.50 AAA Conductor இருப்பு இல்லாத நிலையில் 21.10.2022 அன்று சம்பந்தப்பட்ட பிரிவிற்கு ஒதுக்கீடு பெறப்பட்ட பின்பு 28.10.2022 அன்று மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட தாக அறிய முடிகிறது.

7.5 எனவே, மேல்முறையீட்டாளருக்கு ஒருமுனை மின் பாதையிலிருந்து மும்முனை மின்பாதை மாற்றியமைப்பதற்கான தளவாட பொருட்கள் கையிருப்பு இல்லாத நிலையில்தான் மின்னிணைப்பு வழங்குவதற்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளது எதிர்மனுதாரர் வழங்கிய ஆவணத்தில் இருந்து தெரிய வருகி றது. இந்நிலையில், தமிழ்நாடு மின்சார பகிர்மானச் செயல்திறன் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 21–இன் படி விதிக்கப்பட்ட செயல்திறத்தை அடைய வேண்டு மென உரிமதாரர் எதிர்பார்க்கப்படுகிறார். பல்வேறு மின்சேவைப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட செந்தரங்களைச் சந்திக்க உரிம தாரர் தவறிவிட்டால் , பாதிக்கப்பட்ட நுகர்வோர்கள் உரிமதாரரிடமிருந்து சட்டத்தில் விதிக்கப்பட் ட ஈட்டுத் தொகையைப் பெற உரிமையுடையவர் ஆ வார் என தெரியவருகிறது . ஆனால் தமிழ்நாடு மின்சார பகிர்மானச் செயல்திறன் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 27–ன்படி இந்த ஒழுங்குமுறைவிதியில் குறித்துரைக்கப்பட்ட செயல்திறச் செந்தரங்கள் , தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலைகளின்போது அல்லது உரிமம்தாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள நிலையின் போது நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டும்

என தெரிய வருகிறது . இந்நிலையில் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்குவதில் உரிமதாரருக்கு கொரோனா காலத்தில் மார்ச் 2020 முதல் மார்ச் 2022 வரை ஏற்பட்ட பாதிப்பால் தளவாட பொருட்கள் ஒதுக்குவதில் சமநிலை பாதிக்கப்பட்டது என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதாக இருக்கிறது. மேலும், அந்த காலகட்டத்தில் மேல்முறையீட்டாளரு க்கு மட்டும் மின் இணைப்பு வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது என்ற வாதம் நிராகரிக்கப்படுகிறது . முன்னுரிமை அடிப்படையிலேயே பணிகள் நடைபெற்றது தெரிய வருகிறது . எனவே, மேல்முறையீட்டாளர் உரிமதாரரிடமிருந்து இழப்பீடு கோரும் தொகையான ரூ.50,000/- ஏற்புடையதாக இல்லையென்பதால் நிராகரிக்கப்படுகிறது.

**8.0 பகுப்பாய்வு :**

8.1 மின்குறைதீர் மன்றத்தில் முறையீடு செய்பவர்களின் அனைத்து முறையீடுகளையும் கருத்தில் கொண்டு இறுதி ஆணை வழங்க உத்தரவிடப்படுகிறது. கோரிக்கைகளின் பகுதி ஆணைகள் வழங்குவதை முற்றிலும் தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறது.

**9.0 முடிவுரை:**

9.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்குவதில் உரிமதார ரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு கொரோனா காலத்தின் தொடர்ச்சியால் உற்பத்தி பாதிக்கப்பட்டு தளவாட பொருட்கள் ஒதுக்குவதில் ஏற்பட்ட நிகழ்வுதான் என அறிய முடிவதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

9.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.10/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

பெறுநர்:

1. திரு சோமசுந்தரேஸ்வர் மற்றும் ராமலஷ்மி,
பிளாட் எண் 69 Phase IV, 13வது தெரு,
எவர்கிரீன் என்கேளவ், வெங்கபாக்கம்,
ரத்தினமங்கலம், வண்டலூர்.

2. இளநிலை பொறியாளர்/கண்டிகை,
செங்கற்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கண்டிகை, வண்டலூர்,
கேளம்பாக்கம் ரோடு – 600 127.

3. செயற்பொறியாளர்/ இ&ப/மறைமலைநகர்,
செங்கற்பட்டு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV SS வளாகம், GST ரோடு,
போர்டு கம்பெனி அருகில், மறைமலைநகர் – 603 209.

4. மேற்பார்வை பொறியாளர், – By email
செங்கற்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.130, GST ரோடு, செங்கற்பட்டு – 603 001.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.